Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Pradosha Rites and Beliefs

**S. Dhanalakshmi,** Research Scholar of Tamil, Thiyagarajar College, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-5637-818X**
**DOI: 10.5281/zenodo.6621112**

## Abstract

*In this article, the researcher describes the Pradosa worship practices and beliefs prevalent in Tamil Nadu. Hindu people go to the temple twice a month to attend the Pradosa worship to remove the doshas. The researcher mentions in this review article about worship practices in resolving the karma with the aid of devotion through Pradhosa worship. The Hindu people go to the temple and pray to Lord Shiva for two times in a month to evade the karma. It is a special worship conducted in the Shiva temples. Pradhosa time comes every day (4.30-6.00 pm) but in the thirteenth thiti (thriyodasi) of the Waxing and wanning period of the lunar calwender is considered the most powwrful time that can help the individual soul to get merged with the unicversal soul. So this is considered to be the best of all times for prayer.*

**Keywords:** Pradosam, Practice, Belief.

## References

[1] Rajendran, A. *Pradosa Pooja and Benefits*, Kadiravan Publishing, Raiyapettai, Chennai, First Edition, August, 1993.
[2] Ilayaperumala, Ira. *Pradosa Worship*, Mannady, Chennai, Fourth Edition, 1993.
[3] Sivananda Swami (Tamilakkam Narayanan), *Hindu Fasts and Festivals*, Divine Life Society, Swami Sivananda Road, Rasipuram, Namakkal, Second Edition 1998.
[4] Dharmalingam, M., Bhagwatsalam, R., *Pradosh and Shiva Worship*, Ganga Book Center, Chennai, 7th Edition, May 2000.
[5] Anangan, *Temple Worship*, Beauty Publishing, Kumbakonam.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பிரதோஷ வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும்

**சு. தனலெட்சுமி**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-5637-818X**
**DOI: 10.5281/zenodo.6621112**

**ஆய்வுச் சுருக்கம்**

*இந்து மக்களின் தோஷத்தைப் போக்க மக்கள் மாதம் இருமுறை கோயில்களுக்குச் சென்று பிரதோஷ வழிபாட்டில் கலந்துகொள்கின்றனர். சைவ கோவிலில் பிரதோஷ காலத்தில் நடைபெறும் இந்தச் சிறப்பு வழிபாடாகு ம். பிரதோஷ காலம் என்பது வளர்பிரையில் சதுர்த்தியன்றும், தேய்பிரையில் திரயோதசி அன்றும் மாலை நாலரை மணி முதல் ஆறுமணி வரை உள்ள கலம் பிரதோஷ காலமாக வழிபாடு செய்கின்றனர். இந்தப் பிரதோஷ காலத்தில்தான் சிவபெருமான் நந்தியின் இரு கொம்புகளுக்கு நடுவில் நின்று திருநடனம் புரிந்தார். எனவே பிரதோஷ காலம் புண்ணிய காலமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டின் பிரதோஷ வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் ஆய்வாளர் விவரிக்கிறார்.*

**திறவுச்சொற்கள்**: பிரதோஷம், வழிபாட்டுமுறை, நம்பிக்கை.

## முன்னுரை

சைவ கோவிலில் பிரதோஷ காலத்தில் நடைபெறும் இந்தச் சிறப்பு வழிபாடாகு ம். பிரதோஷ காலம் என்பது வளர்பிரையில் சதுர்த்தியன்றும், தேய்பிரையில் திரயோதசி அன்றும் மாலை நாலரை மணி முதல் ஆறுமணி வரை உள்ள கலம் பிரதோஷ காலமாக வழிபாடு செய்கின்றனர். இந்தப் பிரதோஷ காலத்தில்தான் சிவபெருமான் நந்தியின் இரு கொம்புகளுக்கு நடுவில் நின்று திருநடனம் புரிந்தார். எனவே பிரதோஷ காலம் புண்ணிய காலமாகக் கருதப்படுகிறது. அதன் வழியாக பிரதோஷ காலத்தில் பெரிய தவறுகளும் நேரலாம். இதனால் இறைவழிபாடு செய்யவேண்டும். அவ்வாறு செய்வதால் துன்பங்கள் நீங்கும். தோஷங்கள் அகலும் என்ற பக்தர்கள் நம்பிக்கையின் வாயிலாக வழிபாடு செய்து வருகின்றனர். பிரதோஷ காலத்தில் சிவபெருமானையும், சிவனுடைய வாகனமான நந்திக்கு வழிபாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாதம் இருமுறைகள் பிரதோஷ காலத்தில் நந்தி கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருநடனம் புரிந்தார். தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமானின் நடனமாடிய காலம் ஒரு சனிக்கிழமை மாலைப்பொழுதாகும். அதுவே பிரதோஷ காலமாகும்; சனிப் பிரதோஷம் மிக விசேடமானப் பூசையாகும்.

## ஆய்வு அணுகுமுறை

சிவபெருமானின் கோவில் பிரதோஷ வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளையும் பற்றி விளக்கிக் கூறும் வகையில் விளக்கவியல் அணுகுமுறையும் (Descriptive Approach) கோவிலில் பக்தர்கள் வழிபடும் முறைகளைக் காணும் வாயிலாக சமூகவியல் செய்திகள் இடம்பெறும் நிலையில் சமூகவியல் அணுகுமுறையும் (Sociological Approach) பக்தர்கள் அமைதிநிலையும், பண்பாட்டுக் கூறுகளையும் விளக்கும் வகையில் மானுடவியல் அணுகுமுறையும் (Anthropological Approach) ஆய்வுக் கருத்துக்களைப் பகுத்துக் கூறும் வகையில் பகுப்பாய் அணுகுமுறையும் (Analitical Approach) இதில் பயன்படுத்தப் படுகின்றன.

**பிரதோஷ காலம்**

பிரதோஷ காலத்தில் சிவபெருமானையும் சிவனுடைய அம்சங்கள் பொருந்திய தெய்வங்களையும் வழிபடவேண்டும். யோக நரசிம்மர், இராமர் போன்ற தெய்வங்களையும் இந்தப் பிரதோஷ காலத்தில் வழிபடலாம்.

> **“ப்ர – சிறந்த, தோஷம் – குற்றம். பகலும் இரவும் சந்திக்கும் காலமே ப்ரதோஷ காலம். கடும் தோஷம் உள்ள நேரத்தைப் பிரதோஷம் என்று சொல்லுவார்கள். இது வடமொழிச் சொல், குற்றங்கள் நிறைந்த காலம்” (மகேந்திர வாடி உமாசங்கரன் சௌபாக்கியம் தரும் சிவதுதியும் பிரதோஷ மகிமையும், ப.4)**

என்ற பொருள் கொள்ளலாம்.

தேவர்களும் அசுரர்களும் பார்க்கடலைக் கடைந்த சமயத்தில் பல பொருட்கள் வெளிவந்தன. அதில் ஆலகால விஷமும் வெளிப்பட்டது. அந்த விஷத்தைக் கண்டு தேவர்கள் அஞ்சி நடுங்கினார்கள். அப்போது தேவர்கள் சிவனிடம் முறையிட சிவபெருமான் ஆலகால விஷத்தை எடுத்து உண்டார். அப்போது சக்தி சிவனது கழுத்தைப் பிடித்துக் கொள்ள விஷமானது சிவனது கழுத்தில் நின்றுவிட்டது. அதனால் சிவனது கழுத்து நீலநிலமானது. எனவே சிவனுக்கு நீலகண்டர் என்று பெயர் வந்தது.

**சனிப்பிரதோஷம்**

தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமான் நந்தியின் கொம்புகளுக்கிடையில் நடனமாடினார். இவ்வாறு சிவபெருமான் நடனமாடிய காலம் ஒரு சனிக்கிழமை மாலைப் பொழுதாகும். அதுவே பிரதோஷ காலமாகும். சனிப்பிரதோஷம் மிக விசேசமான பூசையாகும்.

> **“பிர என்பது பாவத்தையும் தோஷம் என்பது போக்கும் நேரம்”**
>
> **(அ.இராஜேந்திரன், பிரதோஷ பூசையும் பலன்களும், ப.30)**

என்பதாகும். பொதுவாக,

> **“பிரதோஷ காலம் – பகல் முடியும் நேரம் தொடங்கி, இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும், நட்சத்திரங்களும் தோன்றும் நேரம் வரை என்று கூறுவர். இதைக் கணக்கிட்டால் மாலை ஐந்து நாற்பத்து ஐந்து (5.45) மணிக்கு மேல் ஆறு முப்பது மணிக்குள் என்று பிரதோஷ காலத்தைச் சாஸ்திர அறிஞர் குறிப்பிட்டுள்ளார்கள்”**
>
> **(இரா.இளையபெருமாள், பிரதோஷ வழிபாடு, ப.3)**

என்கின்றன. பொன்மேனியில் புலித்தோலுடன் மானும் மழுவும் சூலமும் தாங்கி, தண்டை அணிந்த திருவடி ஒலி எழுப்ப நந்திதேவர் மத்தளர் கொட்ட சிவபெருமான் ஆனந்த நடனம் புரிந்தன.

ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்த பதின்மூன்றாம் நாளும் பௌர்ணமியிலிருந்து பதின்மூன்றாம் நாளும், திரியோதசி திதியாகும். சான்றதான் பிரதோஷ நாள். பிரதோஷ தினத்தன்று நாள் முழுவதும் பிரதம் இருந்து பிரதோஷ தரிசனம் முடிப்பது அதிக நற்பலனைத் தருகின்றன.

> **“சிவபெருமான் பிரதோஷ காலத்தில் நந்திதேரின் இரு கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருநடனம் புரிந்தார். இப்பிரதோஷ வேளையில் எல்லா லோகத்தையும் சேர்ந்தவர்கள் இவ்விழாவில் கலந்து கொள்வர்”**
>
> **(அ.இராஜேந்திரன், பிரதோஷ பூசையும் பலன்களும், ப.30)**

என்று கூறப்படுகின்றன. பிரதோஷ காலத்தில் சிவாலயங்களில் சிவனுக்கு சந்தனம், பன்னீர், பால், பஞ்சாமிர்தம், விபூதி ஆகியவற்றால் அபிஷேகம் செய்வாகள். அப்போது ருத்ரம் சொல்லப்படும்.

அபிஷேக ஆராதனை முடிந்தபிறகு உற்சவமூர்த்தி ரிஷப வாகனத்தில் உலா வருவார். இந்தக் காலகட்டத்தில் சிவாஷ்டகம், வில்வாஷ்டகம், லிங்காஷ்டகம் முதலிய சுலோகங்கள் சொல்லப்படுகின்றன.

**சிவனுக்கு வழிபாடு**

சிவன் அபிஷேகப் பிரியர். எனவே பிரதோஷ காலத்தில் சிவனை வழிபட்டால் நன்மைகள் உண்டாகும். உலகமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழகிய காலம் பிரதோஷ காலமாகும். சிவன் மகிழ்ச்சியாக இருக்கும் காலம் இதுவாகும். பிரதோஷ காலத்தில் முதல் வழிபாடு நந்திக்குத்தான். அதன் பிறகே சிவனுக்கு வழிநாடு நடைபெறும்.

**நந்தி வழிபாடு**

பிரதோஷ காலத்தின் சிவனையும் நந்திதேவரையும் சேர்த்து வணங்க வேண்டும். சிவனுக்கும் நந்திக்கும் இடையே செல்லக்கூடாது. நந்தி தேவருக்கும் பிரதோஷ காலத்தில் அருகம்புல் மாலை அணிவித்து பதின்மூன்று நெய் தீபம் ஏற்றி வழிபட வேண்டும்.

பிரதோச காலத்தில் சிவபெருமான் எல்லாவற்றையும் தன்னிடம் அடக்கிக் கொள்கின்றார். நந்தியிடமிருந்து புறப்பட்டு சண்டிகேஸ்வரர் வரை வரவேண்டும். அப்பிரதட்சனமாகச் செய்வதை ‘சோம சாத்திர பிரதட்சினம்’ என்பர். சோம சூத்ரம் என்பது சிவபெருமானுக்குச் செய்யும் அபிசேக நீர் வந்துவிழும் கோமுகியைக் குறிக்கும்.

**“வ்ருஷம் சணிடம் வ்ருஷம்**
**சைவ சோம ஸுத்தம் புனர் – வ்ருஷம்**
**கணடந்து ஸோம ஸுத்ரந்து புனர்**
**கண்டம்புனர் வ்ருஷம்” (ஆலய வழிபாடு , அநங்கன், ப.109)**

சனிப்பிரதோஷத்தைப் போலவே திங்கட்கிழமை காலை வரும் பிரதோஷங்களும் சிறப்பானது. பிரதோஷ கால வழிபாட்டில் காப்பரிசி (வெல்லமும் அரிசியும் சேர்ந்தது) நந்திதேவனுக்கு நிவேதனம் செய்து வழிபாடு நடத்தப்படுகின்றன.

**ஐந்து வகை பிரதோஷ காலங்கள்**

- நித்திய பிரதோஷம் – தினந்தோறும் மாலை நான்கு முப்பது மணிமுதல் ஐந்து மணி வரை கால கட்டமே நித்திய பிரதோஷம் ஆகும்.
- பஷ பிரதோஷம் – வளர்பிறையில் சதுர்த்தி திதியில் மாலை காலமே ‘பஷ பிரதோஷம்’ ஆகும்.
- மாத பிரதோஷம் – தேய்பிறையில் திரயோதசி திதியில் வரும்
- மஹா பிரதோஷம் – தேய்பிறையில் திரயோதசி திதியில் (சனீஸ்வரர்) சனிக்கிழமையில் வந்தால் மிகச்சிறப்புடையது.
- பிரளய பரிதோஷம் – பிரளய காலத்தில் எல்லாம் சிவனிடம் ஒடுங்கும்

**“சிவனைக் குறித்து, பஞ்சக்னியில் பல ஆண்டுகள் கடுந்தவம் செய்தான். அப்பொழுது சிவபெருமான், நந்திதேவரின் முன் தோன்றி எனது ஆணை எங்கும் நிறைந்ததுபோல உனது அதிகாரமும் எங்கும் நிலைத்திருக்கும் என்றார். அதனால் ‘அதிகார நந்தி” (மு.தர்மலிங்கம், ஆர்.பக்தவத்சலம், பிரதோஷமும் சிவவழிபாடும், ப.32)**

என்று பெயர் உண்டாகியது.

**"நந்திதேவரை 'ருத்திரன்' என்றும் அழைப்பர் 'ருத்' எனறால் துக்கம் 'ரன்' என்றால் ஓட்டுபவன். ருத்திரன் என்றால் துக்கத்தை ஓட்டுபவன் என்று பொருள்" (மேலது., ப.34)**

அதனால்தான் பிரதோஷ காலத்தில் நந்திதேவருக்கு அருகம்புல் மாலை, நெய்விளக்கு ஏற்றுதல், பச்சரிசி, வெல்லம் கலந்து வைத்து பூசை செய்கின்றனர்.

**"நந்திதேவர் தருமமே உருவானவர். சிவபெருமான் சீடர்களில் முதன்மையானவர். சிவனின் வாகனமாகச் சிறப்புப் பெற்றவர். முனிவர்கள் எல்லோரும் நந்திதேவரிடம் அனுமதி பெற்றுத்தான் சிவதரிசனம் செய்யவேண்டும்" (மேலது, ப.34)**

இதன் வாயிலாக மக்களும், தனது குறைகளை இறைவனிடம் கூறுவதற்கு நந்திதேவரை அணுகுகின்றனர். பிரதோஷம் என்ற விழா நந்திதேவருக்குரியதாகும்.

**பிரதோஷ பூசையில் செய்ய வேண்டியவை**

- **நந்திதேவருக்கு அபிசேகம் செய்யும்போது எண்ணெய், பால், தயிர், சந்தனம், இளநீர், பன்னீர் போன்றவைக் கொடுத்தல் நல்லது.**
- **சொர்ண அபிசேகம் செய்யும்போது நம்மிடம் உள்ள தங்க நகைகளைக் கொடுத்து தீபாராதனை முடிந்தபின் நகைகயை வாங்கி அணிவது மிகவும் நல்லது.**
- **நந்திதேவருக்குத் தீபாராதனை நடைபெறும்போது, பின்பக்கத்திலிருந்து இரண்டு கொம்புகளின் இடையில் தீபாராதனையைப் பார்த்தால் சகல தோஷமும், பாவமும் நீங்கும்" (அ.இராஜேந்திரன், பிரதோஷ பூசையும் பலன்களம், ப.58)**

மேற்கூறிய பிரதோஷப் பூசையைச் செய்து வந்தால் நன்மைகள் உண்டாகும்.

**பிரதோஷப் பலன்கள்**

பிரதோஷப் பூசையில் கலந்துகொண்ட மக்கள் பலருக்கும் நல்ல பலன்கள்கிடைத்ததாகக் கூறுகின்றன அவை, "தீராத நோய்களிலிருந்து விடுபட்டு நோயற்ற வாழ்வைப் பெற்றுள்ளேன் என்று க.கமலா கூறுகின்றார்." தனது குறைகளைப் பன்னிரண்டு பிரதோஷ பூசையில் நந்திதேவரின் காதலில் யாருக்கும் கேட்காதவாறு கூறிவந்தால், பதிமூன்றாவது பிரதோஷத்தில் நல்ல பலன் கிடைக்கும்.

**1. துன்பம் நீங்கி இன்பம் எய்துவர்**
**2. மலடு நீங்கி மகப்பேறு பெறுவர்**
**3. கடன் நீங்கித் தனம் நிறையப் பெறுவர்**
**4. வறுமை ஒழிந்த செல்வம் சேர்ப்பர்**
**5. நோய் நீங்கி நலம் பெறுவர்**
**6. அறியாமை நீங்கி ஞானம் பெறுவர்**
**7. பாவம் தொலைந்து புண்ணியம் எய்துவர்**
**8. தடைகள் நீங்கித் திருமணம் நடைபெறும்.**
**9. சகல தோஷங்களும் நீங்கிச் சுகம் பெறுவர்**
**10. பிறவி ஒழிந்து முக்தி அடைவர்**

பதினோரு பிரதோஷங்கள் தொடர்ந்து பூஜிப்பவர்கள் ஒரு கும்பாபிசேகத்தைக் கண்ட பலனைப் பெறுவார்கள். நூற்றிருபது பிரதோஷங்களைத் தொடர்ந்து பூஜிப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை என்று கூறப்படுகின்றன.

**பிரதோஷ விரதம்**

பிரதோஷ காலத்தில் விரதம் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும் என்பதற்காக ஒரு கதை சொல்லப்படுகிறது. அவை,

**“ஒரு அந்தணப் பெண், தனது மகன் ‘ஸுசிவ்ரம்’ மற்றும் ‘தர்மகுப்தன்’ என்ற இளவரசனுடன் அவள், சாண்டில்ய முனிவரைப் பார்க்க வந்தாள். முனிவரின் அறிவுரைப்படி அந்தப் பெண்ணும், சிறுவர்களும் மிகுந்த பக்தியுடன் பிரதோஷ விரதத்தை மேற்கொண்டனர். நான்கு மாதங்களுக்குப் பிறகு அதாவது எட்டாவது பிரதோஷத்தின் மீது ஸுசிவ்ரதனி அமிர்த கலசத்தைப் பெற்றார். அதைப் பருகினான். இளவரசன் தர்மகுப்தன் ஒரு தேவகன்னிகையை மணந்தான். தேவகன்னியின் உதவியுடன் தனது எதிரிகளைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினான்” (சுவாமி சிவானந்தா, ஹிந்த விரதங்களும் விழாக்களும், பக்.132-133)**

என்று பிரதோஷ விரதத்தின் மூலம் சிவபெருமானின் அருளை எளிதில் பெறமுடியும் என்பதை இக்கதை உணர்த்துகின்றன. பிரதோஷ தினத்தன்று பகல் முழுவதும் உணவு இருந்தால் இரவில் பால், பழம் மட்டும் அருந்தி வந்தால் பலன் கிடைக்கும். நந்திதேவருக்கு நெய்தீபம் ஏற்றுதல் நல்லது. மௌன விரதம் இருப்பது நல்லது, சிவபுராணம் படித்தால் நல்லது.

**பிரதோஷத்தில் பிரசாத மாதப் பலன்கள்**

| Sl.No | மாதம் | நைவேத்தியத்திற்கான பிரசாதம் | பலன்கள் |
|---|---|---|---|
| 1 | சித்திரை (மேஷம்) | நீர் மோர், தயிர் சாதம் | உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கும் |
| 2 | வைகாசி (ரிஷபம்) | சர்க்கரைப் பொங்கல் | வயிறு கோளாறுகளில் இருந்து விடுபடுதல் |
| 3 | ஆனி (மிதுனம்) | தேன், தினை மாவு | பிள்ளைப்பேறு கிட்டும் |
| 4 | ஆடி (கடகம்) | வெண்ணை, சர்க்கரை | கொலஸ்ட்ரால் போகும் |
| 5 | ஆவணி (சிம்மம்) | தயிர் சாதம் | தடைகள் நீங்கும், நோய் அகலும் |
| 6 | புரட்டாசி (கன்னி) | புளியோதரை, தயிர் சாதம் | அலர்ஜி சம்மந்தப்பட்ட நோய்கள் நீங்கும் |
| 7 | ஐப்பசி (துலாம்) | உளுந்து வகை, ஜிலேபி | குளுமை சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கும் |
| 8 | கார்த்திகை (விருச்சிகம்) | எலுமிச்சை, தேங்காய் கலந்த சாதங்கள் | பெண்கள் கர்ப்பப்பை சம்பந்தமான நோய்கள் நீங்கும் |
| 9 | மார்கழி (தனுசு) | வெண் பொங்கல், கடலை, சுண்டல் | ஆஸ்துமா, காமாலை போன்ற நோய்கள் தீரும் |
| 10 | தை (மகரம்) | தேனும், தயிரும் கலந்தது | மது பர்க்கம், கபம் நீங்கும் |
| 11 | மாசி (கும்பம்) | நெய், சர்க்கரை | சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும், வயிற்று உபாதைகள் அகலும் |

| | | | |
|---|---|---|---|
| **12** | பங்குனி (மீனம்) | தேங்காய், எலுமிச்சை, தக்காளி சாதம் | பித்தம், மனநோய், சித்தம் தடுமாறுதல், ஆகியவை அகலும் |

பிரதோஷ வழிபாடு செய்ய மாலயனாதி வானவர்களும் சிவாலயம் செல்வார்கள். ஆதலால் பிரதோஷ நேரத்தில் திருமால் கோயில்கள் வழிபாடு செய்வதில்லை.

**விரதப் பயன்**

பிரதோஷ வழிபாட்டின் பயனாக வறுமை பயம் மரணவேதனை முதலான அனைத்து இடர்களும் நீங்கிப் புண்ணியப்பேற்றைப் பெறுவர்.

**“செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா**
**அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ**
**மால்அற நேயம மலந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே” (சௌ.செந்தில்குமார், சிவபெருமான் வழிபாடு, ப.59)**

திருவடிப் பேற்றைப் பெறும் தகுதியை உடைய சிவன் முத்தர்கள் சிவ ஆலயத்தையும் சிவனடியார்கள் வேடத்தையும் ‘சிவம்’ எனக் கொண்டு வழிபாடு செய்யப்பட்டன.

**முடிவுரை**

பிரதோஷ காலத்தில் சிவபெருமானையும், சிவனுடைய வாகனமான நந்திக்கு வழிபாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாதம் இருமுறைகள் பிரதோஷ காலத்தில் நந்தி கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருநடனம் புரிந்தார். தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமானின் நடனமாடிய காலம் ஒரு சனிக்கிழமை மாலைப்பொழுதாகும். அதுவே பிரதோஷ காலமாகும்; சனிப் பிரதோஷம் மிக விசேடமானப் பூசையாகும்.

பிரதோஷ தினத்தன்று, பகல் முழுவதும் உணவு அருந்தாமல் இரவில் பால், பழம் மட்டம் அருந்தி வந்தால் பலன் கிடைக்கும். நந்திதேவருக்கும் நெய் தீபம் ஏற்றுதல் மற்றும் விரதம் இருத்தல் போன்ற வழிபாடுகள் செய்யப்பட்டன. பிரதோஷத்தில் பிரசாத மாதப் பலன்கள் மூலம் பெறப்படும் நன்மைகள் பெறும், சித்திரை (மேஷம்) வைகாசி (ரிஷபம்) என்று 12 மாதங்களுக்கும் நைவேத்தியங்கள் செய்யப்பட்டன. மற்றும், பிரசாதங்கள் நீர்மோர், சர்க்கரைப் பொங்கல், தேன், திணைமாவு, உளுந்து, எலுமிச்சை, கடலை, சுண்டல் போன்றவைகளை பயன்படுத்துகின்றன.

**துணைநூற் பட்டியல்**

[1] இராஜேந்திரன், அ., *பிரதோஷ பூசையும் பலன்களும்*, கதிரவன் பதிப்பகம், சென்னை, 1993.
[2] இளையபெருமாள, இரா., *பிரதோஷ வழிபாடு*, மண்ணடி, சென்னை, நான்காம் பதிப்பு, 1993.
[3] சிவானந்தா சுவாமி (தமிழாக்கம் நாராயணன்), *ஹிந்து விரதங்களும் விழாக்களும்*, தெய்வீக வாழ்க்கைச் சங்கம், சுவாமி சிவானந்தா சாலை, நாமக்கல், இரண்டாம் பதிப்பு 1998.
[4] தர்மலிங்கம், மு., பக்தவத்சலம், ஆர்., *பிரதோஷமும் சிவ வழிபாடும்*, கங்கை புத்தக நிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு, மே.2000.
[5] அநங்கன், *ஆலய வழிபாடு*, அழகு பதிப்பகம், கும்பகோணம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.